சுருக்கம்

அறிவிப்பு – மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பு – தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்தின் கட்டடம் மற்றும் இதர கட்டுமானத் தொழிலாளர்கள் சட்ட அமலாக்கப் பிரிவின் 30 அலுவலர்களுக்கு மடிக்கணினிகள் வழங்குதல் –அனுமதி அளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (ஜ2) துறை

அரசாணை (நிலை) எண்.24

நாள்: 28.02.2017
துன்முகி, மாசி 16,
திருவள்ளுவர் ஆண்டு 2048
படிக்கப்பட்டது:

1. இயக்குநர், தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம், சென்னை, கடிதம் எண்.E1/24595/2016, நாள் 22.11.2016.
2. செயலாளர், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம், சென்னை கடிதம் எண்.ஆ1/28135/2016, நாள் 7.12.2016.
3. தொழிலாளர் ஆணையர், சென்னை, கடிதம் எண்.W1/43317/2016, நாள் 26.12.2016.

-----

ஆணை:-

2016–2017–ம் ஆண்டுக்கான சட்டமன்றப் பேரவை வரவு செலவு கூட்டத் தொடரின் போது, தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்தின் கட்டடம் மற்றும் இதர கட்டுமானத் தொழிலாளர்கள் சட்ட அமலாக்கப் பிரிவு அலுவலர்கள், விபத்துகளை புலனாய்வு செய்து அறிக்கைகள் தயார் செய்யவும், பாதுகாப்பு பயிற்சி வகுப்புகள் நடத்தவும், இயக்கக வலைதளத்தினைப் பயன்படுத்தி பணிகளை சிறப்பாக மேற்கொள்ளவும் 22.12 இலட்சம் ரூபாய் செலவில் 30 மடிக்கணினிகள் வழங்கப்படும் என்று மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் அறிவிப்பு வெளியிட்டார்கள்.

2. மேலே ஒன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில், i7 U series, 4GB RAM 500 GB HDD with 1GB Graphics Card புற வடிவமைப்பில் ரூபாய் 22.12 இலட்சம் செலவினத்தில் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரிய நிதியினைப் பயன்படுத்தி 30 மடிக்கணினிகள் வாங்க இயக்குநர் தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் அவர்கள் தக்க கருத்துரு அனுப்பியுள்ளார்.

3. மேலே இரண்டு மற்றும் மூன்றில் படிக்கப்பட்ட கடிதங்களின் வாயிலாக செயலாளர், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியம் மற்றும் தொழிலாளர் ஆணையர் ஆகியோர் 30 மடிக்கணினிகளை தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல நிதியிலிருந்து வாங்க தங்களது ஒப்புதலை அளித்துள்ளனர்.

4. கவனமான பரிசீலனைக்குப் பின்னர், i 7U series, 4GB RAM 500 GB HDD with 1GB Graphics Card புற வடிவமைப்பில், மைய அரசின் Directorate General of

.த.பி.பா.

Supplies and Disposal புதிய விலை அறிவித்தவுடன் அந்த விலை அல்லது தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (ELCOT) அளிக்கும் விலை இவற்றில் எது குறைந்ததோ அதன் அடிப்படையில் அல்லது Tamil Nadu Transparency in Tender Act, 1998–ன் வழிமுறைகளைப் பின்பற்றி 30 மடிக்கணினிகளை ரூ.22.12 இலட்சம் உத்தேச செலவினத்தில் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரிய நிதியைப் பயன்படுத்தி வாங்கிக் கொள்ள இயக்குநர் தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் அவர்களுக்கு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது. இக்கருத்துருவினை உரிய நேரத்தில் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரியத்தின் முன் வைத்து ஒப்புதல் பெறுமாறு தொழிலாளர் ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

5. மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை முன்பணமாக இயக்குநர், தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் அவர்களுக்கு ஒப்பளிப்பு செய்யுமாறு செயலாளர், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார். மேலும், மடிக்கணினிகள் வாங்கியதற்கான பட்டியல் மற்றும் பயனீட்டுச் சான்றிதழை தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்திடம் சமர்ப்பித்து கணக்கினை நேர்செய்யுமாறு இயக்குநர், தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**மங்கத் ராம் சர்மா**
**அரசு முதன்மைச் செயலாளர் (பொ).**

**பெறுநர்**
இயக்குநர், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம், சென்னை–600 014.
தொழிலாளர் ஆணையர், சென்னை–600 006.
செயலாளர், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம், சென்னை–600 034.

**நகல்**
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை–600 009.
மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–600 009.
நிதித்துறை , சென்னை – 600 009.
தகவல் தொழில்நுட்பத் துறை, சென்னை – 600 009.
செயலாளரின் தனிச் செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை–600 009.
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (அநமு–2) துறை, சென்னை–600 009. (2 நகல்)
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

இராஜேந்திரன்
பிரிவு அலுவலர்.

28-2-17